## $12^{TH}$ வேதியியல்

### 1. உலோகவியல்

1. ஊது உலைகளில் அடையக்கூடிய அதிகட்ச வெப்பநிலை. **AIPMT 2012**

**1. 2200 K** 2. 1900 K 3. 5000 K 4. 1200 K

2. ஊது உலையில் தூய்மையற்ற இரும்பு தயாரிக்கும் போது கசடு உருவாகும் வினை.

**AIPMT 2011**

1. $2C_{(s)} + O_{2(g)} \rightarrow 2CO_{(g)}$
2. $Fe_2O_{3(s)} + 3CO(g) \rightarrow 2Fe(l) + 3CO_{2(g)}$
3. $CaCo_3(g) \rightarrow CaO(g) + CO_{2(g)}$
4. **$CaO(g) + SiO_2 \rightarrow CaSiO_{3(g)}$**

3. சல்பைடுகளை வறுக்கும் போது X வாயுவை துணைப் பொருளாகக் கொடுக்கிறது. இது நிறமற்ற வாயு, மூச்சுத் தினறல் வைக்க கூடிய மற்றும் அமில மழையாகவும் உருவாகும். அந்த கரைசல் அமிலத்தன்மையானது ஒடுக்கும் பண்பையும் மற்றும் தனித்தன்மை பெறவில்லை எனில் அத்தகைய வாயு? AIPMT 2013

1. $H_2S$ **2. $SO_2$** 3. $CO_2$ 4. $SO_3$

4. சயனைடு கழுவுதல் முறைக்கு நன்கு தூனாக்கப்பட்ட தாதுவை உட்படுத்தும் போது கரையும் தன்மையுடைய பொட்டாசியம் அர்ஜெண்டோ சயனைடு எனும் சேர்மம் கிடைக்கிறது எனில் அத்தனிமம் யாது? AIPMT 1989

1. லெட் 2. குரோமியம் 3. மாங்கனீஸ் **4. சில்வர்**

5. நைட்ரைடிங் (Nitriding) செயல்முறையைப் பயன்படுத்தி எஃகின் மேற்பரப்பை கடினப்படுத்த பயன்படும் சூழல் எது? AIPMT 1989

**1. $NH_3$** 2. $N_2$ 3. $O_3$ 4. $H_2S$

6. பின்வரும் எந்த உருகிய கலவையில் இருந்து மின்னாற்பகுத்தல் மூலம் அலுமினா ($A1_2O_3$) விலிருந்து அலுமினியம் பிரித்தெடுக்கப்படுகிறது? AIPMT P.01.04.2012

1. **$A1_2O_3 + Na_3A1F_6 + CaF_2$**
2. $A1_2O_3 + KF + Na_3A1F_6$
3. $A1_2O_3 + HF + NaA1F_4$
4. $A1_2O_3 + CaF_2 + NaA1F_4$

7. பின்வருவனவற்றுள் எது இரும்பின் கனிமமாகும். AIPMT P. 01.04.2012

1. பைரோலுசைட்
2. **மேக்னடைட்**
3. மாலகைட்

4. கேசிடரைட்

8. 40% NaCl மற்றும் 60% $CaCl_2$ உருகிய நிலையில் உள்ள கரைசலை மின்னாற்பகுக்கும் போது சோடியம் உருவாகிறது. ஏனெனில் AIMPT 1995

1. $Ca^{2+}$ ஆனது NaCl – ஐ Na ஆக ஒடுக்குகிறது.
2. $Ca^{2+}$ ஆனது NaCl-லிருந்து Na-ஐ இடபெயர்ச்சி செய்கிறது.
3. மின்சாரத்தை கடத்துவதில் $CaCl_2$ முக்கிய பங்கு வகிக்கிறது.
4. **மேற்கண்ட கரைசலின் உருகுநிலையானது NaCl- ஐ விட குறைவு.**

9. அலுமினாவை தூய்மையாக்கும் முறை. AIIMS 2008

**1. பேயரின் முறை** 2. போஷ் முறை 3. காஸ்னர் முறை 4. ஹூப்ஸ் முறை

10. கூற்று : துருவமுனைத் தூய்மையாக்கல் முறை மாசுக்கள் உருகிய உலோகத்தில் கரையும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

காரணம் : தூய உலோக ஆக்ஸைடு துருவமுனைத் தூய்மையாக்கலில் உருவாகிறது.

AIIMS 27.05.2018 FN

1. கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கமாகும்.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கமல்ல.
3. **கூற்று சரி ஆனால் காரணம் தவறு.**
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

11. சல்பைடு தாதுவை ஒடுக்குவதற்கு முன் வறுத்தலின் நன்மையில் கீழ்கண்ட எந்த கூற்று தவறானது? CBSE PMT 2007

**1) சல்பைடு தாதுவின் $\Delta G_f^o$ மதிப்பு $CS_2$மற்றும் $H_2S$ ஐ விட அதிகம்.**

2) சல்பைடு தாதுவை ஆக்ஸைடாக மாற்றும் போது $\Delta G_f^o$ எதிர்க்குறி உடையது.

3) வெப்ப இயக்கவியலின் படி சல்பைடு தாதுவை வறுத்து ஆக்ஸைடாக மாற்றுவது சாத்தியமானது.

4) உலோக சல்பைடுகளை ஒடுக்க கார்பன் மற்றும் ஹைட்ரஜன் சிறந்த ஒடுக்கும் காரணி.

12. வழக்கமாக சல்பைடு தாது நுரைமிதப்பு முறையில் அடர்பிக்கப்படுகிறது. விதிவிலக்காக கீழ்கண்ட எந்த சல்பைடு தாது வேதிக் கழுவுதல் முறையில் அடர்பிக்கப்படுகிறது? CBSE PMT 2007

1. கலீனா 2. காப்பர் பைரைட் 3. ஸ்பேலிரைட் **4. அர்ஜென்டைட்**

13. அட்டவணை I மற்றும் அட்டவணை II ஐ பொருத்துக. மேலும் அதன் சரியான குறியீடுகளுடன் இணைக்க. AIPMT 2016

| அட்வணை I | அட்டவணை II |
|---|---|
| a) சயனைடு முறை | i) மீத்தூய்மையான Ge |
| b) நுரை மிதப்பு முறை | ii) குறைக்கும் காரணி –ZnS |
| c) மின்னாற் ஒடுக்கம் | iii) Al – யை பிரித்தெடுத்தல் |

d) புலத்தூய்மையாக்கல் iv) Au யை பிரித்தெடுத்தல்

v) தூய்மையாக்கல் - Ni

குறியீடு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| **1.** | **(iv)** | **(ii)** | **(iii)** | **(i)** |
| 2. | (ii) | (iii) | (i) | (v) |
| 3. | (i) | (ii) | (iii) | (iv) |
| 4. | (iii) | (iv) | (v) | (i) |

14. கீழ்கண்ட கரிமச்சேர்மத்தின் IUPAC பெயரைக் கூறு

NEET 2017



1. **3 கீட்டோ 2 மெத்தில் ஹெக்ஸ் 4 ஈனல்**
2. 5 ∴பார்மைல் ஹெக்ஸ் 2 ஈன் 3 ஒன்
3. 5 மீத்தைல் 4 ஆக்ஸோ ஹெக்ஸ் 2 ஈன் 5 அல்
4. 3 கீட்டோ 2 மெத்தில் ஹெக்ஸ் 5 ஈனல்

15. சல்பைடு தாதுவில் இருந்து தாமிரத்தை பிரித்தெடுக்கும்பொழுது குப்ரஸ் ஆக்சைடை எதனுடன் ஒடுக்கத்திற்கு உட்படுத்தும்பொழுது கடைசியாக உலோகம் கிடைக்கப்பெறுகிறது ?

**AIPMT – 2015**

1. இரும்பு(II) சல்பைடு 2. கார்பன் மோனோஆக்சைடு

**3. காப்பர் (I) சல்பைடு** 4. கந்தகடைஆக்சைடு

16. அவேகாட்ரா எண் (Na) $6.022 \times 10^{23}\ mol^{-1}$ –ல் இருந்து $6.022 \times 10^{20} mol^{-1}$ -க்கு மாறும்பொழுது மாறுவது **AIPMT – 2015**

1. கிராம் அலகில் உள்ள நிறையின் வரையறை
2. **1 மோல் கார்பனின் நிறை**
3. சமன்படுத்தப்பட்ட சமன்பாட்டில் உள்ள வேதிபொருள்களின் விகிதம்
4. 1 சேர்மத்தில் உள்ள தனிமங்களின் விகிதம்

17. உலர் வெள்ளிகுளோரைடுடன் சோடியம் கார்பனேட் வினைபுரிந்து கிடைக்கும் வெள்ளியானது கீழ்காணும் நிலையில் கிடைக்கிறது. AIIMS 1999

**1. தனித்த உலோகம்** 2. $Ag_2C_2$ 3. $Ag_2O$ 4. $Ag_2CO_3$

18. 18 காரட் தங்கத்தில், தங்கத்தின் சதவீதம் AIIMS 1999

1. 90 **2. 75** 3. 50 4. 25

19. அலுமினியத்தின் தாதுவான பாக்சைட்டை தூய்மைபடுத்தும் முறை AIIMS 1996

1. ஹால் முறை 2. செர்பெக்முறை 3. பேயர் முறை **4. மேற்கண்ட அனைத்தும்**

20. கொப்புளக் காப்பர் என்பது AIIMS 1996

1. காப்பரின் உலோக கலவை
2. தூய காப்பர்
**3. 1% மாசு கலந்த காப்பர்**
4. காப்பரின் தாது

21. கீழ்க்கண்டவற்றுள் சல்பைடு தாது எது? AIIMS 1996

1. கார்னலைட்
2. மேக்னடைட்
**3. காப்பர் பைரைட்டுகள்**
4. மாலகைட்

22. கீழ்க்கண்டவற்றுள் எது குறைந்த இருமுறை திருப்புத்திறனை பெற்றுள்ளது?

AIIMS 2012

1. $NH_3$ 2. $NF_3$ 3. $SO_2$ **4. $BF_3$**

23. கூற்று (A) $CH\equiv CH$ இன் நிலைப்புத்தன்மை

$CH_2=CH_2$ விட அதிகம்.

காரணம் (R) – $HC\equiv C^-$ S- பண்பு

$H_2C=CH_2$ விட அதிகம். AIIMS 2012

1. **கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று, காரணம் இரண்டும் தவறு.

24. கூற்று : சிர்கோனியம் தூய்மைப்படுத்துதலில் $2rI_4$பயனுள்ளதாகஉள்ளது.

காரணம் : அறைவெப்பநிலையில் $ZrI_4$பதங்கமாக்கப்படுகிறது. AIIMS 26.05.19 FN

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்குசரியானகாரணம் விளக்கப்பட்டது.
2. **கூற்றுமற்றும் காரணம் இரண்டும் சரி. கூற்றுக்குசரியானகாரணம் விளக்கப்படவில்லை.**
3. கூற்றுசரிகாரணம் தவறு.
4. கூற்றுமற்றும் காரணம் இரண்டும் தவறு.

25. MnO என்பது AIIMS 26.05.19 FN

1. பெர்ஃரோகாந்தம்
2. **எதிர் பெர்ஃரோகாந்தம்**
3. பெர்ரிஃக் காந்தம்
4. டையாகாந்தம்

26. கூற்று : கோளநீர் துளிகள் சமமானபரப்பில் தட்டையாக உருவாவது ஏன்?

காரணம் : புவி ஈர்ப்பு விசை காரணமாக தட்டையாக உருவாகிறது. AIIMS 26.05.19 FN

1. **கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்குசரியானகாரணம் விளக்கப்பட்டது.**

2. கூற்றுமற்றும் காரணம் இரண்டும் சரி. கூற்றுக்குசரியானகாரணம் விளக்கப்படவில்லை.
3. கூற்றுசரிகாரணம் தவறு.
4. கூற்றுமற்றும் காரணம் இரண்டும் தவறு.

27. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றை கண்டறிக. NEET 2020

1. 4% கார்பன் கொண்ட மாசு உள்ள இரும்பு தேனிரும்பு
2. $CO_2$ வெளியேற்றத்தால் கொப்புள காப்பர்
3. வான் ஆர்கல் முறையில் நிக்கலுக்கு ஆவிநிலை தூய்மை செய்யப்படுகிறது.
**4. வார்ப்பு இரும்பு வெவ்வேறு வடிவங்களில் வார்க்கலாம்**

28. அறை வெப்பநிலையில் மிகத் தூய்மையான உலோக நீர்மம் எந்த முறையில் கிடைக்கப்பெறுகிறது. (NEET 2021)

1. மின்னாற்பகுத்தல்
2. வண்ணப்பிரிகைமுறை
3. **வாலைவடித்தல்**
4. புலத்தூய்மையாக்கல்

29. ஊது உலையின் அதிகபட்ச வெப்பநிலை அடைவது NEET 2021

1. Upto 1200 K
**2. Upto 2200 K**
3. Upto 1900 K
4. Upto 5000 K

30. எந்த முறையானது தாமிரத்தின் உருக்கிப்பிரித்தலில் பயன்படுகிறது? AIIMS 26.05.18 AN

1. காப்பரின் சுயஒடுக்கம்
2. $Cu_2S$ ஆனது $Cu_2O$ வாக மாற்றப்படுதல்
**3. FeS ஆனது FeO ஆக மாற்றப்படுதல்**
4. Fe ன் ஒடுக்கம்

31. கூற்று : காற்றில்லா சூழலில் வலுத்தலானது குறைந்த அளவிலான காற்றை செலுத்தி அதன் தாதுவின் உருகுநிலைக்கு கீழே வெப்பப்படுத்தப்படுகிறது

காரணம் : சல்பைடு தாதுக்கள் காற்றில்லா சூழலுக்கு உட்படுத்தப்படுகிறது

AIIMS 26.05.18 AN

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் கொடுக்கப்பட்ட காரணமானது மேற்கண்ட கூற்றுக்கு சரியான விளக்கமாகும்
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணமானது கூற்றுக்கு சரியான விளக்கமல்ல
3. **கூற்று சரி ஆனால் காரணம் தவறு**
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

32. தாது மற்றும் மாசுக்களுக்கு இடையேயான அடர்த்தி வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்ட அடர்ப்பித்தல் முறை ____________ AIIMS 26.05.2019 AN

**1. தூளாக்ககி அடர்ப்பித்தல்**
2. கழுவுதல்

3. காந்தப் பிரிப்பு முறை                4. நீர்மமாக்கல்

33. கூற்று: Zns மற்றும் PbS கொண்ட தாதுக்களுக்கு NaCN குறைக்கும் காரணியாக பயன்படுத்தப்படுகிறது. AIIMS 26.05.2019 AN

காரணம்: NaCN ஆனது குறிப்பாக ZnS நுரைத்தலை தடுக்கிறது ஆனால் PbS நுரைத்தலை அனுமதிக்கிறது.

1. **கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியானவை. காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கமாகும்**
2. கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியானது. ஆனால் காரணமானது, கூற்றிற்கு சரியான விளக்கம இல்லை.
3. கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
4. கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.

34. கீழ்கண்ட உலோக இணைகளில் எது வான்ஆர்கல் முறையில் தூய்மையாக்கப்படுகிறது?

AIPMT 2011

1. Ni மற்றும் Fe                2. Ga மற்றும் In
**3. Zr மற்றும் Ti**                **4.** Ag மற்றும் Au

35. கீழ்கண்டவற்றுள் இரும்பின் கனிமம் எது? AIPMT PRE 2012

**1. மேக்னடைட்**    2. மாலக்கைட்    3. கேசிட்டரைட்    4. பைரோலுசைட்

36. சல்பைடு தாது விலிருந்து காப்பர் பிரத்தெடுகத்தலில் குப்பரஸ் ஆக்சைடுடன் எதனை சேர்த்து ஒடுக்கும் போது உலோகம் (காப்பர்) உண்டாகிறது. AIPMT PRE 2012

1. கார்பன் மோனாக்சைடு (CO)
2. காப்பர் I சல்பைடு($Cu_2S$)
3. சல்பர் டை ஆக்சைடு($SO_2$)
4. இரும்பு சல்பைடு (FeS)

37. அலுமினாவில் ($Al_2O_3$) இருந்து அலுமினியம் பிரத்தெடுத்தலில் பய்னபடுத்தபடும் உருகிய கலவை

1. $Al_2O_3 + KF + Na_2\,AlF_6$
2. $Al_2O_3 + HF + Na_2\,AlF_6$
3. $Al_2O_3 + CaF_2 + Na_2\,AlF_4$
4. $Al_2O_3 + Na_2\,AlF_6 + Ca\,F_2$

38. காப்பர் பைரைட் அதிக காற்றுடன் வறுக்கப்படும் பொழுது CuO + FeO உருவாகிறது. FeO மாசாக காணப்படுகிறது இதை கசடாக CuO ஒடுக்கம் செய்யும் போது நீக்கலாம். கசடு உருவாதலுக்கு சேர்க்கப்படும் இளக்கி AIIMS 27.05.2018 AN

1. $SiO_2$, அமில இளக்கி

2. சுண்ணாம்பு கல், கார இளக்கி
3. $SiO_2$, கார இளக்கி
4. CaO , கார இளக்கி

39. கூற்று: உருக்கிப் பிரித்தலில், வறுக்கப்பட்ட தாது இளக்கி முன்னிலையில் கல்கரி தூளுடன் வெப்பப்படுத்தப்படுகிறது.
காரணம்:ஆக்ஸைடுகள் C அல்லது CO ஆல் உலோகமாக ஒடுக்கப்படுகிறது, மாசுக்கள் கசடாக வெளியேற்றப்படுகின்றன. AIIMS 27.05.2018 AN

1. **கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றின் சரியான விளக்கம்.**
2. கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.
3. கூற்று, சரி ஆனால் காரணம் தவறு.
4. கூற்று, காரணம் இரண்டும் தவறு.

40. எலிங்கம் வரைபடத்தை கருதும்போது, அலுமினாவை ஒடுக்கப் பயன்படும் உலோகம் எது? NEET 2018

1. Fe 2. Cu **3. Mg** 4. Zn

41. வேறுபட்ட கனஅளவுள்ள NaOH மற்றும் வேறுபட்ட செறிவுள்ள HCl கரைசல்களை கலந்து பின்வரும் கரைசல்கள் தயாரிக்கப்பட்டது. பின்வருவனவற்றுள் எந்த கரைசலின் PH மதிப்பு ஒன்றுக்கு சமமாக இருக்கும்? NEET 2018

1. 6ml $\frac{M}{10}$ Hcl + 40ml $\frac{M}{10}$ NaOH
**2. 5ml $\frac{M}{10}$ HCl + 45ml $\frac{M}{10}$ NaOH**
3. 75ml $\frac{M}{5}$ HCl + 25ml $\frac{M}{5}$ NaOH
4. 100ml HCl + 100ml $\frac{M}{510}$ NaOH

42. 2.3g பார்மிக் அமிலம் மற்றும் 4.5g ஆக்சாலிக் அமிலம் ஆகியவற்றின் கலவையானது செறிவூட்டப்பட்ட $H_2SO_4$ உடன் வினைப்படுத்தப்படுகிறது. இவ்வாறு உருவான வாயுவானது பொட்டாசியம் ஹைட்ராக்சைடு துகள்கள் வழியாக அனுப்பப்படுகின்றது? STP யில் உள்ள மீதமுள்ள விளைபொருளின் எடை யாது? NEET 2018

1. 1.4 2. 4.4 **3. 2.8** 4. 3.0

43. பின்வரும் ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க வினைக்கு $MnO_4^{-2} + C_2O_4^{2-} + H^+ \rightarrow Mn^{2+} + CO_2 + H_2O$ சமன்படுத்தப்பட்ட வினையின் வினைப்படுபொருட்களின் சரியான கெழுக்கள் NEET 2018

| | $MnO_4^-$ | $C_2O_4^{2-}$ | $H^+$ |
|---|---|---|---|
| 1. | 16 | 5 | 2 |
| **2.** | **5** | **16** | **2** |
| 3. | 2 | 16 | 5 |
| 4. | 2 | 5 | 16 |

44. அலுமினியத்தின் முக்கியதாது? AIIMS 1995

1. கயோலின் 2. கோரண்டம் **3. பாக்சைட்** 4. ரூபி

45. குறைகடத்தியின் பயன்படும் சிலிக்கான் தனிமத்தை தூய்மைபடுத்த பயன்படும் முறை AIPMT 1996

1. வெற்றிடத்தின் கீழ் வெப்பப்படுத்துதல்
2. மிதப்பு முறை
**3. புலத்தூய்மையாக்கல்**
4. மின்னாற்பகுத்தல்

46. ஒடுக்க வினைக்கு உட்படுத்துவதற்கு முன் சல்பைடு தாதுக்களை வறுத்தலில் ஏற்படும் நன்மையினை பொறுத்து பின்வரும் கூற்றுகளில் எது தவறானது? AIPMT 2007

1. சல்பைடை அதன் ஆக்ஸைடாக வறுத்தல் என்பது ஒரு சாதகமான வெப்ப இயக்கவியல் செயல்முறையாகும்
**2. உலோக சல்பைடுகளுக்கு கார்பன் மற்றும் ஹைட்ரஜன் தகுந்த பொருத்தமான ஒடுக்கும் காரணிகளாகும்**
3. $CS_2$ மற்றும் $H_2S$ ஆகியவற்றை காட்டிலும் சல்பைடின் $\Delta G^0 f$ மதிப்பு அதிகம்
4. சல்பைடை வறுத்து ஆக்ஸைடாக மாற்றும் வினைக்கு $\Delta G^0 f$ மதிப்பு எதிர்குறியுடையது

47. பொதுவாக சல்பைடு தாதுக்கள் நுரைமிதப்பு முறையில் அடர்பிக்கப்படுகின்றன. கீழ்காணும் எந்த சல்பைடு தாது விதிவிலக்காக வேதிக்கழுவுதல் முறையில் அடர்ப்பிக்கப்படுகிறது AIPMT 2007

1. ஸ்ஃபாலரைட் **2. அர்ஜண்டைட்** 3. கலீனா 4. காப்பர் பைரைட்

48. **கூற்று** : தாதுவை தகுந்த வினைக்காரணியுடன் கரைத்து அதிக நேர்மின் தன்மை உள்ள உலோகத்தை வீழ்படிவாக்கும் முறை நீர்ம–உலோகவியல் (Hydrometallurgy) ஆகும்

**காரணம்** : நீர்ம-உலோகவியல் முறையில் காப்பர் பிரித்தெடுக்கப்படுகிறது AIIMS 2017

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணமானது கூற்றிற்கான சரியான விளக்கமாகும்
**2. கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல**
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

49. **கூற்று** : உலோக ஆக்ஸைடுடன் அலுமினியத்துடன் ஒடுக்கும் போது மெக்னீசியம் கிடைக்கப் பெறாது AIIMS 25.05.19 FN

**காரணம்** : Al ஐ விட Mg குறைந்த நேர்மின் சுமையைக் கொண்டது

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணமானது கூற்றிற்கான சரியான விளக்கமாகும்
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

**3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு**

4. கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் தவறு

50. பின்வருவனவற்றுள் கார்பனேட் தாது எது ? **AIIMS – 2005**

1. பைரோலுசைட் **2. மாலகைட்**

3. டயாஸ்போர் 4. கேசிட்ரைட்

51. **கூற்று** : இரும்பு உலோகமானது இரும்பு ஆக்ஸைடு தாதுவை கல்கரியுடன் வெப்பப்படுத்தி பிரித்தெடுக்கப்படுகிறது **AIIMS – 2005**

**காரணம்** : $Fe_2O_{3(s)} \rightarrow Fe_{(s)} + {}^{3}/_{2}\, O_{2(g)}$ ஒரு தன்னிச்சையான வினையாகும்

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
3. கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
4. **கூற்று மற்றும் காரணம் தவறு**

52. $\Delta G^0$ VsT என்ற எலிங்கம் வரைபடத்தில் கீழ்நோக்கிய சாய்வை கொண்ட வினை.AIIMS 2015

1. $C + \frac{1}{2} O_2 \rightarrow Co$ 2. $CO + \frac{1}{2} O_2 \rightarrow Co_2$

3. $2 Ag + \frac{1}{2} O_2 \rightarrow Ag_2O$ 4. $Mg + \frac{1}{2} O_2 \rightarrow MgO$

53. **கூற்று** : கார்பனேட், ஹைட்ராக்ஸைடு தாதுக்களும், நுரைமிதப்பு முறையில் அடர்ப்பிக்கப்படுகின்றன.

**காரணம்** : நுரைமிதப்புமுறையில், மாசுதுகள்களை ஈரமாக்க கனிம எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. AIIMS 2015

1. கூற்று,காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்குசரியானவிளக்கமாகும்.
2. கூற்று,காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்குசரியானவிளக்கம் அல்ல.
3. கூற்றுசரி,காரணம் தவறு.
4. **கூற்று,காரணம் இரண்டும் தவறு.**

54. நுரை மிதப்பு முறையில் நுரைக்கும் காரணியாக பயன்படும் எண்ணெய் எது? AIIMS 2016

**1. பைன் எண்ணெய்** 2. கடுகு எண்ணெய்

3. தேங்காய் எண்ணெய் 4. ஆலிவ் எண்ணெய்

55. பின்வருவனவற்றுள் எது சில்வரின் தாது ஆகும்? AIPMT 1988

**1. அர்ஜன்டைட்** 2. ஸ்டிபினைட்

3. ஹேமடைட் 4. பாக்சைட்

56. பின்வரும் உலோகங்களில் எது ஈரப்பதம் கலந்த காற்றுடன் உடனடியாக துருப்பிடித்தலில் ஈடுபடுகிறது? AIPMT 1988

1. தங்கம் 2. சில்வர் 3. நிக்கல் **4. இரும்பு**

57. எலிங்கம் வரைபடத்தை கருத்தில் கொண்டு, அலுமினாவை ஒடுக்க கீழ்கண்டவற்றுள் எந்த உலோகத்தை பயன்படுத்த இயலும்?

CBSE 2018 06.05.2018

1. Fe 2. Cu **3. Mg** 4. Zn

58. வரிசைI மற்றும் II–ல் உள்ளவற்றை சரியாக பொருத்தியுள்ளதை கண்டறி

**CBSE 2016 P1**

| **வரிசை-I** | **வரிசை –II** |
|---|---|
| அ. சயனைடு முறை | (i) மிக தூய்மையான Ge |
| ஆ. நுரை மிதப்பு முறை | (ii) ZnS-ஐ அடர்ப்பித்தல் |
| இ. மின்னாற் ஒடுக்குதல் முறை | (iii) Al-ஐ பிரித்தெடுத்தல் |
| ஈ. புலத்தூய்மையாக்கல் | (iv) Au-ஐ பிரித்தெடுத்தல் |
| | (v) Ni-ஐ துய்மையாக்கல் |

| | **(அ)** | **(ஆ)** | **(இ)** | **(ஈ)** |
|---|---|---|---|---|
| **1.** | **(iv)** | **(ii)** | **(iii)** | **(i)** |
| 2. | (ii) | (iii) | (i) | (v) |
| 3. | (i) | (ii) | (iii) | (iv) |
| 4. | (iii) | (iv) | (v) | (i) |

60. பின்வருவனவற்றுள் எது மாலகைட்? NEET 2019

**1. $CuCO_3.Cu(OH)_2$** 2. $CuFeS_2$

3. $Cu(OH)_2$ 4. $Fe_3O_4$

61. சல்பைடு தாதுவிலிருந்து காப்பர் உலோகத்தை பிரித்தெடுக்கும் போது ஒடுக்கும் காரணியாக $Cu_2O$ வுடன் பயன்படுத்தப்படுவது எது? AIIMS 2003

**1. FeS** 2. CO 3. $Cu_2S$ 4. $SO_2$

62.வார்ப்பு இரும்பில் உள்ள அதிகபட்ச அளவு உள்ள மாசு AIPMT 1998

1. Mn 2. P **3. கிரா∴பைட்** 4. சல்பர் (S)

63. சில்வர் உமிழ்தல் என்பது AIIMS 2002

1. Ag $NO_3$ கரைசலின் ஒடுக்கம்
2. பற்குழி அடைப்பதற்கு சில்வர் (வெள்ளி) ரசக்கலவை தயாரித்தல்
3. $Ag_2S$ தாதுவிலிருந்து சில்வர் பிரித்தல்
4. **உருகிய சில்வரைக் குளிர்விக்கும் போது ஆக்ஸிஜன் வெளியேறுவது.**

64. நுரை மிதக்கும் முறையில் அனிலின் மற்றும் கிரசாலின் பங்கு யாது? AIIMS 2013

1. **நிலைப்படுத்தி** 2. குறைக்கும் காரணி 3. ஈரமாக்கும் காரணி 4. இவை அனைத்தும்

65.காப்பர் மின்னாற் தூய்மையாக்கல் முறையில் சிறிதளவு தங்கம் படிகிறது? AIIMS 2014

1. எதிர்மின்வாய் 2. **ஆனோடு மாசு / நேர்மின்வாய் மாசு**
3. எதிர் மின் வாய் மாசு 4. மின்வாய்

66. கூற்று : கார்பனுடன் சேர்த்து ஒடுக்கும் போது $Al_2O_3$ அலமினியமாக மாற்றப்படுகிறது
காரணம் : அலுமினியத்தை காட்டிலும் ஆக்ஸிஜனுடன் கார்பன் அதிக நாட்டமுடையது

AIIMS 2014

1. கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கம் ஆகும்
2. கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கம் அல்ல
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. **கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.**

67.கீழ்க்கண்டவற்றுள் எந்த இணை உலோக ஆக்ஸைடுகளை உலோகங்களாக ஒடுக்ககார்பன் & CO வாயுபயன்படுகிறது AIIMS-2007

1. FeO, SnO 2. SnO, ZnO 3. BaO, $Na_2O_2$ **4. FeO, ZnO**